# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**( அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ / புகொக (RPO) /19/2, 29–07–2011 நாளிட்டது )**
(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டடதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 61,66,86(1)(e), ஆகிய பிரிவுகளுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின்படி, 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் கடப்பாடு) ஒழுங்குமுறைவிதிகளை, 2010 டிசம்பர் 22ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் குறித்துரைத்துள்ளது மற்றும் அறிவிக்கை செய்துள்ளது என்பதாலும் ;

மற்றும் மேலேயுள்ள ஒழுங்குமுறைவிதிகளுக்கு ஒருசில திருத்தங்ளைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் அத்தகைய திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வகைமுறைகளுக்கு உட்பட்டிருக்கும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 61,66,86(1)(e) ஆகிய பிரிவுகளுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களையும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களயும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், டிசம்பர் 7ஆம் நாளிட்ட அறிவிக்கை எண். த.மி.ஒ.ஆ/புகொக(RPO)/19/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட மற்றும் 2010 டிசம்பர் 22ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI–பிரிவு 2 (பின்னிணைப்பு) இல் வெளியிடப்பட்ட 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்முறை ஆணைய (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் கடப்பாடு) ஒழுங்குமுறைவிதிகளுக்கு பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளை இதன் மூலம் செய்கிறது :

**<u>திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்</u>**

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

(அ) இந்த ஒழுங்குமுறை விதிகள், 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் கடப்பாடு ) (திருத்தம்) ஒழுங்குமுறை விதிகள் என்று வழங்கப்பெறும்.

(ஆ) இவை, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. முதன்மை ஒழுங்குமுறை விதிகளின் 2ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :—**

(i) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், 2ஆம் ஒழுங்குமுறைவிதியின், **(1)**ஆம் உள்—ஒழுங்குமுறைவிதியில் **(g)** கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

*"(g) கடப்பாடுடைய நிறுவனம்" என்பது, இந்த ஒழுங்குமுறைவிதிகளின்படி புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டிற்கு சட்டப்படி இணங்கி 3ஆம் ஒழுங்குமுறைவிதியில் விவரிக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு உட்படுகின்ற, மின்பகிர்மான உரிமம்தாரர்கள், நுகர்வோருக்குச் சொந்தமான மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட சுய உபயோக மின்உற்பத்தி நிலையங்களின் (CGPs) நுகர்வோர் மற்றும் தமிழ்நாடு மாநிலத்திலுள்ள திறந்த நுழைவுரிமை நுகர்வோர் என்று பொருள்படும் ";*

**3. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 3ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், 3ஆம் ஒழுங்குமுறைவிதிக்குப் பதிலாக பின்வரும் ஒழுங்குமுறைவிதி அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

"**3.** புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாடு :—

**(1)** கடப்பாடுடைய நிறுவனம் ஒவ்வொன்றும், கீழே குறித்துரைக்கப்பட்டவாறு, ஓர் ஆண்டின்போது புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டின்படி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து தன்னுடைய மின்நுகர்வில் குறைந்தபட்ச விழுக்காட்டிற்கு குறையாமல் கொள்முதல் செய்தல் வேண்டும் :

| வ.எண் | ஆண்டு | மொத்த புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டின் குறைந்தபட்ச அளவு விழுக்காட்டில் (கிலோவாட் மணியில் மின்சாரத்தின் அளவு) | | (3) ஆம் பத்தியில் குறிப்பிடப்பட்ட மொத்த புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டில் சூரியசக்தி புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டின் குறைந்தபட்ச அளவு விழுக் காட்டில் (கிலோவாட் மணியில் மின்சாரத்தின் அளவு) | |
|---|---|---|---|---|---|
| | | மின் பகிர்மான உரிமம்தாரர் | சுயஉபயோக மற்றும் திறந்த நுழைவுரிமை நுகர்வோர் | மின் பகிர்மான உரிமம்தாரர் | சுயஉபயோக மற்றும் திறந்த நுழைவுரிமை நுகர்வோர் |
| (1) | (2) | (3) | | (4) | |
| 1. | 2011—12 | 9% | 9% | 0.05 % | 0.05 % |

ஆனால், கடப்பாடுடைய நிறுவனம், சூரியசக்தியிலிருந்து செய்யப்படும் மின்கொள்முதலின் குறிப்பிட்ட ஆண்டிற்கான குறைந்தபட்ச கொள்முதல் அளவு, சூரியசக்தி புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சான்றிதழ் **(REC)** அல்லது சூரிய சக்தி வடிவில் சந்தையில் கிடைக்கக்கூடியதாக இல்லை என்ற உண்மையை உறுதிப்படுத்துமானால், மற்றும் ஆணையம் இந்த உண்மை பற்றி திருப்தி கொள்ளுமானால், அத்தகைய நேர்வுகளில், சூரியசக்தி புதுப்பிக்கத்தக்க மின் கொள்முதல் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்காக பிற எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படுதல் வேண்டும்.

மேலும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைக் கொள்முதல் செய்வதற்கான அத்தகைய கடப்பாடு, சம்பந்தப்பட்ட கடப்பாடுடைய நிறுவனத்தினால் ஏற்கெனவே புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து செய்யப்படும் கொள்முதல்கள், எவையேனுமிருப்பின், அவற்றை உள்ளடக்கும் ;

ஆனால் மேலும், ஒவ்வொரு கடப்பாடுடைய நிறுவனத்திற்காக குறிப்பிடப்பட்ட பின்வரும் ஆதாரங்கள் மற்றும் வழிவகைகளிலிருந்து கொள்முதல் செய்யப்படும் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி, புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டிற்காக கணக்கிடப்படுதல் வேண்டும்.

**(a)** **<u>மின்பகிர்மான உரிமம்தாரர்கள்</u> :–**

**(i)** ஆணையத்தினால் நிர்ணயிக்கப்பட்ட முன்னுரிமை மின்கட்டணத்தின்படி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட மற்றும் அவர்கள் மின்வழங்கல் பகுதியில் நுகரப்பட்ட மின்சாரம் ;

**(ii)** சொந்தமான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் அவர்கள் மின்வழங்கல் பகுதியில் நுகரப்பட்ட மின்சாரம் ;

**(iii)** மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒழுங்குமுறைவிதிகள் / ஆணைகளில் குறித்துரைக்கப்பட்ட வீதத்தில், மொத்த மின்சாரத்தின் சூரியசக்தி பகுதியாக, என்.வி.வி.என்–இடமிருந்து **(NVVN)** கொள்முதல் செய்யப்படும் மின்சாரம்.

**(b)** **<u>சுய உபயோக மின் நுகர்வோர்</u> :–**

புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சான்றிதழ் அல்லது சலுகை / ஊக்குவிக்கும் மின்செலுத்தல் அல்லது மின்சாரம் கொண்டு செல்லுதல் கட்டணங்கள், வங்கி சேமிப்பு வசதி நலன் மற்றும் மின் தீர்வை / வரியை விட்டுவிடுதல் வடிவிலான

முன்னுரிமை நடவடிக்கைகள் எதனையும் பயன்படுத்தாமல் தம்முடைய சொந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொண்டு செல்லப்பட்டு உள்ளபடியே நுகரப்பட்ட மின்சாரம்.

(c) <u>திறந்த நுழைவுரிமை மின் நுகர்வோர்</u> :—

புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சான்றிதழ் அல்லது சலுகை / ஊக்குவிக்கும் மின்செலுத்தல் அல்லது மின்சாரம் கொண்டு செல்லுதல் கட்டணங்கள், வங்கி சேமிப்பு வசதி நலன் மற்றும் மின்தீர்வை / வரியை விட்டுவிடுதல் வடிவிலான முன்னுரிமை நடவடிக்கைகள் எதனையும் பயன்படுத்தாமல் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொண்டு செல்லப்பட்டு உள்ளபடியே நுகரப்பட்ட மின்சாரம்.

(2) ஏதேனும் ஆண்டிற்கான புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாடு ஆணையத்தினால் குறித்துரைக்கப்படாதிருக்குமானால், இது குறித்து, ஆணையத்தினால் திருத்தியமைத்தல் எதுவும் செயற்படுத்தப்படும்வரை முந்திய ஆண்டிற்காக குறித்துரைக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாடு அந்த கால அளவிற்கு அப்பாலும் தொடருதல் வேண்டும்.

(3) மாநில வழிகாட்டும் முகமைக்கு, இயக்க வலுக்காட்டாய நிலை மற்றும் பிற தொடர்புடைய காரணிகளைக் கவனத்தில் கொண்டு, சுய உபயோக மற்றும் திறந்த நுழைவுரிமை மின் நுகர்வோரால் செய்யப்படும் புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டிற்கு இணங்கியிருத்தல் கீழே விவரிக்கப்பட்டவாறு பல்வேறு நிலைகளில் நிறைவேற்றப்படுதல் வேண்டும் : —

(a) முதல் நிலையில், புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டிற்கு இணங்கியிருத்தல், இந்த ஒழுங்குமுறைவிதிகளில் தொடக்கத்தேதியிலிருந்து எந்த சுயஉபயோக மற்றும் திறந்த நுழைவுரிமை மின் நுகர்வோருக்காக ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை 2 மெகாவோல்ட் ஆம்பியர் மற்றும் அதற்கு மேலும் இருக்கிறதோ, அந்த சுய உபயோக மற்றும் திறந்த நுழைவுரிமை மின்நுகர்வோருக்கு நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(b) இரண்டாம் நிலையில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் கடப்பாட்டிற்கு இணங்கியிருத்தல் எந்த சுய உபயோக மற்றும் திறந்த நுழைவுரிமை மின் நுகர்வோருக்காக ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை, 1 மெகாவோல்ட் ஆம்பியர் மற்றும் அதற்கு மேலும் இருக்கிறதோ, அந்த சுய உபயோக மற்றும் திறந்த நுழைவுரிமை மின் நுகர்வோருக்கு 01—04—2012லிருந்து நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

**(c)** மூன்றாம் மற்றும் இறுதி நிலையில், புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டிற்கு இணங்கியிருத்தல், ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையை கருத்தில் கொள்ளாமல், அனைத்து சுய உபயோக மற்றும் திறந்த நுழைவுரிமை நுகர்வோர் அனைவருக்கும் **01–04–2013**–லிருந்து நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

**(4)** <u>**முதன்மை ஒழுங்குமுறைவிதியின் 6ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்**</u> **:–**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், **6**ஆம் ஒழுங்குமுறைவிதியின் **(1)**ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், **(b)**கூறுக்குப் பின்பு, பின்வரும் வரம்புரைகள் சேர்க்கப்படுதல் வேண்டும், அவையாவன ,–

ஆனால், மின்கொள்முதல் உடன்பாட்டின் விதிமுறைகள் மற்றும் வரையறைகளின் மீறுகைக்காக, மின்உற்பத்தி நிறுமத்திற்கு எதிராக ஆணையம் அல்லது தகுதியுடைய நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணை அல்லது தீர்முடிவு காணப்படுமானால், முன்னுரிமை மின்கட்டண வீதத்தில், மின்விற்பனை செய்வதற்கான மின்கொள்முதல் உடன்பாட்டிணை எழுதிக்கொடுத்துள்ள அத்தகைய மின்உற்பத்தி நிறுமம், உடன்பாடு முன்னதாக முதிர்வடைவதை பொறுத்து, உடன்பாடு முறிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுகள் கால அளவு அல்லது மின்கொள்முதல் உடன்பாடு முடிவடையும் தேதி வரையில் இதில், எது முந்தியதோ, அதுவரையில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சான்றிதழ் திட்டத்தில் பங்கு கொள்வதற்கு தகுதியுடையதாகாது :

ஆனால், மேலும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் அடிப்படையில் மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட சுய உபயோக மின்உற்பத்தி நிலையம் அத்தகைய நிலையத்திலிருந்து மின்உற்பத்தி செய்யப்படும், துணை நுகர்வு நீங்கலான, ஆனால் சுய உபயோகம் உள்ளடங்கலான மொத்த மின்உற்பத்திக்கு, புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாடு திட்டத்தில் பங்குகொள்ள தகுதியுடையதாகும். ஆனால், அத்தகைய சுய உபயோக மின் உற்பத்தி நிலையம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கடப்பாட்டில் பங்குவகிப்பதற்கு சலுகை அல்லது ஊக்குவிக்கும் மின் செலுத்தல் அல்லது மின்சாரம் கொண்டு செல்லுதல் கட்டணங்கள், வங்கிச் சேமிப்பு நலன்கள், மற்றும் மின்சாரத் தீர்வை / வரியை விட்டுவிடுதல் வடிவிலான நலன் எதனையும், அத்தகைய சுய உபயோக மின்உற்பத்தி நிலையம் பயன்படுத்தவில்லை அல்லது பயன்படுத்த உத்தேசிக்கவில்லை, என்ற நிபந்தனைக்கு உட்படவேண்டும் :

ஆனால், மேலும், அத்தகைய சுய உபயோக மின்உற்பத்தி நிலையம், சலுகை மின்செலுத்தல் நலன்கள், அல்லது மின்சாரம் கொண்டு செல்லுதல் கட்டணங்கள்,

வங்கிச் சேமிப்பு வசதி நலன் மற்றும் மின்தீர்வை / வரியை வேண்டாமென விட்டுவிடுதல் வடிவிலான நலனை தானாகவே அனுபவிக்காமல் விட்டுவிடுமானால், அது அத்தகைய நலன்களை அனுபவிக்காமல் விட்டுவிடும் நாளிலிருந்து மூன்றாண்டுகள் காலஅளவு கழிந்த பின்பு மட்டுமே புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சான்றிதழ் திட்டத்தில் பங்கு கொள்வதற்கு தகுதியுடையதாகும்.

(2) சுய உபயோக மின் உற்பத்தி நிலையத்தினால் அத்தகைய சலுகை அல்லது ஊக்குவிக்கும் நலன்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதா அல்லது இல்லையா என்பது குறித்த வினாவின்பேரில் , பூசல், ஏதேனுமிருப்பின், அது ஆணையத்திற்கு சுட்டியனுப்பப்படுதல் வேண்டும் மற்றும் ஆணையத்தின் முடிவு இறுதியானதாகும்.

*(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)*

**சி. குணசேகரன்**
செயலாளர்
தமிழ்நாடு மின்சார
ஒழுங்குமுறை ஆணையம்